

# கிழித்தெறிந்தேன்!

எ. சுந்தர், இரண்டாம் இளங்கலை, இயைபியல்

சிதறித் துடிக்கும் சிந்தனைகளை ஒரு நிலைப் படுத்திச் செயல்படுகின்றேன். சோதனை! அம்மம்மா! இதுவரை எவருக்கும் ஏற்படாத சோதனை! அன்று நான் மேடைகளிலே முழங்கிய முழக்கம், தாள்களிலே வரைந்த உணர்ச்சிக் கீறல்கள், இவையெல்லாம் வாழ்விலே உண்மை நிலை ஏற்று என்னை எதிர்த்து வந்து நிற்கின்றன. என்னுடைய கொள்கைகள் உண்மையிலே இதயத்தினின்று வெளிவந்த இலட்சியப் புரட்சிக் கருத்துக்கள்தான். அன்று கல்லூரிப் பெருமேடையிலே மூன்று ஒலி பெருக்கிகளின் முன் அந்தப் பெரும் மன்றமே குலுங்கும் வண்ணம் முழங்கி அனைவரின் கைத் தட்டல்களைப் பெற்றதும், பிறகு பேச்சின் இறுதியில் உணர்ச்சி வெள்ளத்தினால் மயங்கிச் சாய்ந்ததும், இதனைக்கண்ட பெருமக்கள் கூட்டம் இதுவரை கண்டிராத இலட்சியவாதியினை எதிர்நோக்கி மேடைக்கே கூட்டமாக வந்ததும், பிறகு கல்லூரித் தினத்தன்று பல தலைவர்கள் முன்னிலையிலே பதக்கமேற்றுப் புகழ் பெற்றதும், பல பத்திரிகைகள் புகைப்படத்துடன் எனது இலட்சியக் கருத்துக்களைப் பாராட்டி எழுதியதும் நிழல் படங்கள்போல் எனது மனத்திரையிலே விழுகின்றன.

"பொறியியல் கல்லூரியிலே சேர்ந்து பட்டம் பெறவேண்டும் என்று துடிதுடிக்கும் மாணவர்களில் எத்தனை பேர் அக்கலையில் உண்மையான ஆர்வம் உடையவர்கள்? அதில் சேரும் மாணவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் எந்த எண்ணத்துடன் சேருகின்றனர் தெரியுமா? பணம் சேர்க்க வேண்டும். பலர் போற்றும் பெரியோனாகி வீடும், காரும் சிறந்து விளங்கப்பெற்றுப் பெருவாழ்வு நடத்த வேண்டும். இதுதானே பலருடைய ஒரே குறிக்கோளாய் இருக்கின்றது. ஆனால் அதில் சேர விரும்பும் ஒருவன் இலக்கியத்திலே விருப்பம் உள்ளவனாக இருப்பான். ஆனால் அவனுடைய எண்ணம் பணம் சேர்க்க வேண்டும் என்ற பேய் ஆசையின் முன் தவிடு பொடியாகி விடுகின்றது! பணம் சேர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கிற்காகவா படிக்க வேண்டும்? இன்று எழுந்துவிட்ட சமுதாயச் சிக்கல் இது! நமது நாகரிகத்தை அழிக்க வரும் பெரும் அபாயம் இது. இதனால்தான் உண்மையான பொறியியல் வல்லுனர்கள் நாட்டில் தோன்றுவதில்லை. போலி மருத்துவர்களும் போலித் தலைவர்களும் நாட்டிலே மலிகிறார்கள். இதைத் தடுக்க வழியே இல்லையா! மனிதனுக்கு மனம் உள்ளம் என்பனவெல்லாம் எங்கும் காண முடியாதன ஆகிவிட்டனவே! நம்மில் சிலராவது நம் உள்ளம் விழையும் கலையினை நாடுவோம்" என்று நான் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு சொற் போரில் பேசியது இன்றும் என் செவிகளிலே ஒலிக்கின்றது. அன்று அப்படி மார்தட்டிக் கூறிய மாவீரன், அந்தக் கொள்கை மறவன், இன்று கோழையாகி விட்டேன்! கொள்கையைப் பலி கொடுத்து விட்டேன்!

அப்படிக்கூட ஆண்டுகள் அதிகம் ஆகவில்லையே! கல்லூரியைவிட்டு இரு ஆண்டுகள் தானே! நான் கல்லூரியில் நுழையும்போதே ஒரு சிறந்த குறிக்கோளுடன் நுழைந்தேன். பொறியியல் படிப்பு! இல்லையேல் மருத்துவக் கல்வி! இவை இரண்டுதான் உண்மையான படிப்பாகும் என்று மாணவர் சமுதாயம் நினைத்திருக்கும் நிலையிலே நான் புரட்சிகரமாக எனது முழு விருப்புடன் இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தேன். வருங்கால வாழ்வினைப் பற்றி நான் சிறிதும் கவலைப்பட

வில்லை. ஆனால் இன்று எனது கல்வித்திறன் கொடிகட்டிப் பறக்கும் இந்த நவீன விஞ்ஞான யுகத்தின் முன் மதிப்பற்ற ஒன்று! இலக்கியம் கற்ற எனக்கு இந்தச் சமுதாயம் ஆசிரியர் வேலை தந்ததே தவிர வேறு எந்த வேலையும் அளிக்க வில்லை. உள்ளத்தைப் பண்படுத்தும் மொழிக் கலை கற்றவன் உலகத்திற்கு வேண்டாதவனும்! எனது தந்தை என் நிலை கண்டார். படித்து முடித்த நான் ஆசிரியனாகத் திகழ்வதா என்று கடிந்தார்! எனக்கும் இதில் விருப்பமில்லைதான். ஆனால் இலக்கிய வெறியிலே இதனையெல்லாம் நான் அன்று உணர்ந்தேனா!

நிலைமை இதுவென்றால், என்னை மருத்துவப் படிப்புக்கு மேலும் அனுப்பத் தயார் என்றார் தந்தை. நான் சிந்தித்தேன்! வேண்டா வெறுப் புடன் அவர் வாங்கி வந்திருந்த மனுப் பத்திரத்தை முடித்துக் கொடுத்தேன். ஆனால் எனக்கு எங்கே மருத்துவக் கல்லூரியிலே இடம் கிடைக்கப் போகிறது. தந்தையைத் திருப்தி செய்ய அவர் சொற்படி நடந்தேன்.

ஆனால்—கிடைத்துவிட்டது இடம்! மருத் துவப் பெரும் கல்லூரியிலே! எப்படியோ இடம் வாங்கித் தந்துவிட்ட எனது தந்தையின் மகிழ்ச்சிப் பெருக்கை என்னென்பது! "எனக்கு எப்படிக் கிடைத்தது?" என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. "நீ ஒரு பெரிய மருத்துவனானால் கை நிறையக் காசு குவியும். அழகிய வீடு, கார்." எனது தந்தை ஆசை மூட்டினார். நானும் ஒரு கணம் சிந்தித்தேன். வந்த வாய்ப்பை நழுவ விடுவதா? ஆயிரத்தில் ஒருவனுக்குக் கிடைக்கும் அரிய வாய்ப்பன்றோ இது! ஆமோதித்து விடுவோம். எனது உடன் பாட்டினைத் தெரிவிக்கும் நிலையில் மனம் என்னை விட்டுப் பிரிந்து என் முன் நின்று என்னைப் பார்த்துச் சிரித்த சிரிப்பு—ஒரு பயங்கரக் கதறல்.

"இதனால் தான் போலி மருத்துவர்களும் போலித் தலைவர்களும் நாட்டில் மலிகின்றனர். இதைக் தடுக்க வழியே இல்லையா? மனிதனுக்கு மனம் உள்ளம் என்பனவெல்லாம் எங்கும் காண முடியாதது ஆகிவிட்டதே!— ஆ! ஆ! ஆ!" உள்ளமே என்னைப் பார்த்துச் சிரிக்கும் நிலை என்னை அணு அணுவாகச் சித்திரவதை செய் வதைவிடப் பயங்கரமான நிலை.

ஆம். நான் போலி மருத்துவனாகத்தான் திகழ் வேன். அன்று உலகம் வியக்கும் கொள்கை களைப் பலர் வியக்கக் கூறிய நான் — அந்த இலட்சியவாதி — இன்று! என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை! கொள்கைகளும், குறிக் கோள்களும் மேடைப் பேச்சோடும், தாள்களோ டும் மட்டும் முடிந்து விடுகின்றனவா! வாழ்க் கையில் அவற்றைச் சந்திக்கும்போது அவை செய்ய முடியாதவை ஆகிவிடுகின்றனவா? பேச்சுக்கும், எழுத்துக்கும் தொடர்பற்றதா வாழ்க்கை? அன்று நான் முழங்கிய மேடை முழக்கத்தினைக் கேட்டு அந்த அறையில் உள்ள ஒவ்வொரு அணுவும் கரைந்து ஓடினவே! நான் பேசியது வாயினின்று வந்ததாலா? அல்லது உள்ளத்தினின்று வந்ததாலா?

நான் மேடைக்குச் சென்று முழங்கிக் கொண்டிருக்கிறேன்! உடல் என்னை விட்டுப் பிரிந்து என் பேச்சினைக் கேட்கும் வண்ணம் அந்தக் கூடத்தின் ஒரு மூலையிலே தலை நாணி நிற்கின்றது. ஆ! குனிந்த தலை நிமிர்கின்றது. குருதி கொப்புளிக்கின்றது. ஓடுகின்றேன்! ஓடு கின்றேன்! பழைய நிலையினை-நோக்கி! உயிரும் உடலும் இப்போது இணைகின்றன. "கொள்கை" என்பது தெய்வீகத் தன்மை பொருந்தியது! அது மனத்தினிலே தோன்றி வளர்ந்துவிட்ட பிறகு அதனைப் பிடுங்கி எறிய முற்படுவதைவிட உயிரைப் பிடுங்கி எறிவது ஆயிரம் முறை சரியானது!

எனக்கு முன் என்னைப் பார்த்து சிரித்த அந்த மருத்துவக் கல்லூரி அழைப்பிதழை சுக்குநூறாகக் கிழித்தெறிந்தேன். எங்கிருந்தோ ஆவேசத்துடன் உள் நுழைந்த காற்று அக் காகிதத் துகள்களை அறை முழுவதும் சிதற அடித்தது!

வேளாண் கல்லூரி
அன்பு ஒளி மார்ச் 1966
பக்கம் : 2